ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2026 சனவரி 28 |

*நாணயக் கொள்கை மீளாய்வு: இல. 01 – 2026 சனவரி*

# இலங்கை மத்திய வங்கி ஓரிரவு கொள்கை வீதத்தினை மாற்றமின்றிப் பேணுகின்றது

நாணயக் கொள்கைச் சபையானது நேற்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில், ஓரிரவு கொள்கை வீதத்தினை 7.75 சதவீதம் கொண்ட அதன் தற்போதைய மட்டத்தில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. உள்நாட்டுத்துறை மற்றும் உலகளாவிய நிச்சயமற்றதன்மைகள் ஆகியவற்றில் பரிணமிக்கின்ற அபிவிருத்திகள் மற்றும் தோற்றப்பாட்டை பரிசீலனையிற்கொண்டதன் பின்னர் சபை இத்தீர்மானத்தினை மேற்கொண்டது. தற்போதைய நாணயக் கொள்கை நிலைப்பாடானது பணவீக்கத்தினை 5 சதவீதம் கொண்ட இலக்கினை நோக்கி வழிநடாத்துவதற்குத் துணையளிக்குமென சபை கருதுகின்றது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்ட பணவீக்கமானது 2025 திசெம்பரில் 2.1 சதவீதத்தில் தொடர்ந்தும் மாற்றமின்றிக் காணப்பட்டது. இருப்பினும், உணவு விலைகள் நவெம்பருடன் ஒப்பிடுகையில் திசெம்பரில் சிறிதளவு உயர்வடைந்து காணப்பட்டது. டித்வா புயலினால் நிரம்பல் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள் மற்றும் பண்டிகைக் காலப்பகுதியில் நிலவிய உணவிற்கான உயர்ந்தளவிலான கேள்வி என்பன இதற்குக் காரணமாக அமைந்தன. பணவீக்கமானது படிப்படியாக அதிகரித்து, 2026இன் இரண்டாம் அரையாண்டளவில் 5 சதவீதம் கொண்ட இலக்கினை எட்டுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடையிலிருந்தான தளம்பலடைகின்ற உணவு, வலு மற்றும் போக்குவரத்து என்பவற்றில் ஏற்படக்கூடிய விலை மாற்றங்களை உள்ளடக்காத மையப் பணவீக்கமும் அண்மைய மாதங்களில் சிறியளவிலான அதிகரிப்பொன்றினைக் காட்டியுள்ளது. முன்னோக்கிப் பார்க்கையில், பொருளாதாரத்தில் கேள்வி வலுவடைவதனால் மையப் பணவீக்கமானது மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, பணவீக்க எதிர்பார்க்கைகள் பணவீக்க இலக்கினை அண்மித்து நன்கு நிலைநிறுத்தப்படுமெனப் புலப்படுகின்றது.

பொருளாதாரமானது 2025இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் 5.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2025இன் பிற்பகுதியில் ஏற்பட்ட டித்வா புயலினைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளில் மெதுவடைதலொன்று காணப்படுகின்ற போதிலும், முன்னணிக் குறிகாட்டிகள் பாரியளவிலான தாக்குப்பிடிக்கும்தன்மையினைப் பிரதிபலிக்கின்றன. வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் என்பவற்றினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது 2025இன் பிற்பகுதியிலும் அதன் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினைத் தொடர்ந்தது. மேம்படுகின்ற பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அதிகரித்தளவிலான வாகன இறக்குமதிகள் என்பவற்றிற்கு மத்தியில் கொடுகடனிற்கான அதிகரித்தளவிலான கேள்வியினை இது பிரதிபலிக்கின்றது. புயலிற்குப் பின்னரான மீள்கட்டமைப்பானது இவ் உத்வேகத்தினைத் தொடர்ந்தும் நிலைநிறுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவடைதலிற்கு மத்தியில், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கானது 2025இல் கணிசமானளவிலான மிகையொன்றினைப் பதிவுசெய்திருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் 2025இல் தொடர்ந்தும் ஆரோக்கியமாகக் காணப்பட்டன. இவ் ஆண்டுக்

காலப்பகுதியின் பாரியளவிலான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளிற்கு மத்தியில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2025இன் இறுதியளவில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியன்[1] தொகைக்குக் கட்டியெழுப்பப்பட்டன. மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் மற்றும் பல்புடை முகவராண்மைகளிலிருந்தான உட்பாய்ச்சல்கள் என்பன முக்கியமாக இதற்கு ஆதரவளித்தன. இலங்கை ரூபாவானது 2025இல் ஐ.அ.டொலரிற்கெதிராக 5.6 சதவீதத்தினால் பெறுமதித்தேய்வடைந்து காணப்பட்டதுடன் இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் பரந்தளவில் உறுதியாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

பணவீக்கம் இலக்கை அண்மித்து நிலையுறுதியடைவதை நிச்சயப்படுத்துவதற்குப் பொருத்தமான கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை, பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றலை எய்துவதனை ஆதரவளிப்பதற்குச் சபை தொடர்ந்தும் தயாராகவுள்ளது.

நாணயக் கொள்கை மீளாய்வு பற்றிய அடுத்த கிரமமான அறிக்கை வெளியீடு 2026 மாச்சு 25ஆம் நாளன்று நடைபெறும்.

[1] இது சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கின்றது.

## இணைப்பு 01:

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்* (காலாண்டு, கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு)**

2026 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளின் அடிப்படையிலமைந்துள்ளது




*மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்*

***மத்திய வங்கிக்கும் நிதியமைச்சரிற்கும் இடையில் 2023 ஒத்தோபரில் கைச்சாத்திடப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கானது (5%) இணங்கிக்கொள்ளப்பட்டது.*

*வீச்சு வரைபடத்திலுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் 2026 சனவரி மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாகவிருந்த சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

குறிப்பு: வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப் பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினைத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளியினைப் பிரதிபலித்து, உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளியினுள் அமையப்பெறுவதற்கான 50 சதவீத நிகழ்தகவினை எடுத்துக்காட்டுகின்றது. நம்பிக்கை இடைவெளிகள் நீண்ட காலத்தில் பணவீக்க எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றன.

***குறிப்பு:* எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.**

2026 சனவரி மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. அவை உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகளின் எதிர்வுகூறல்கள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிப் பாதை, அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்படும் இறைப் பாதை மற்றும் பெடரல் நிதியங்கள் வீதத்தினால் குறித்துரைக்கப்பட்ட உலகளாவிய நிதியியல் நிலைமைகள் ஆகிய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றன. மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீதப் பாதை மற்றும் அதன்மூலம் தோற்றம்பெறுகின்ற பேரண்டப்பொருளாதாரப் பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். இவ்வூகங்களில் ஏற்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

வலுவான கொடுகடன் வளர்ச்சியின் காலங்கடந்த தாக்கம் மற்றும் டித்வாவுடன் தொடர்புடைய நிவாரண நிதி வழங்கல்கள் என்பவற்றினால் உந்தப்பட்ட எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான கேள்வி அழுத்தங்களின் சாத்தியமான அபிவிருத்தி; இலங்கை ரூபாவின் உயர்ந்தளவிலான மட்டங்களிலான சாத்தியமான பெறுமதித்தேய்வு; வேளாண்மை மற்றும் வலுத் துறைகளைப் பாதிக்கின்ற சாத்தியமான பாதகமான வானிலை

நிலைமைகள் மற்றும் அதன்மூலம் உணவு மற்றும் வலுப் பணவீக்கத்தின் மீதான மேல்நோக்கிய அழுத்தம்; மற்றும் உலகளாவிய நிரம்பல் சங்கிலிகள் மற்றும் பண்டச் சந்தைகள் போன்றவற்றில் இடையூறு ஏற்படுத்தக்கூடிய உயர்வடைந்த புவிசார் அரசியல் பதற்றங்களிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான நிச்சயமற்றத்தன்மை, அதன்மூலம் பணவீக்கத்திற்கு ஏற்படும் மேல்நோக்கிய இடர்நேர்வுகள் போன்ற காரணிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற பணவீக்க எறிவுகளின் அடைவிற்கு மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. அதேவேளை, தாழ்ந்தளவு மட்டங்களில் பணவீக்கத்தின் சாத்தியமான நிலைத்தன்மை; டித்வாவுடன் தொடர்புடைய இடையூறுகளைத் தொடர்ந்து மீள்பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின் தொடர்ச்சியான முன்னேற்றம், வேளாண்மை உற்பத்திக்கு ஆதரவளித்து உணவு விலை அழுத்தங்களைத் தளர்த்தல்; மற்றும் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க தாழ்ந்தளவிலான எரிபொருள் செலவுகள் காரணமாக வலு மற்றும் போக்குவரத்துத் துறைப் பணவீக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மெதுவான அதிகரிப்பின் சாத்தியப்பாடு என்பவற்றினை பணவீக்க எறிவுகளின் அடைவிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் உள்ளடக்கின்றன.

தரவு இணைப்புப் பெறுவழி: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/mpr01_2026_t.pdf